**நகரங்களிற்கான சுகாதாரம் மற்றும் தூய்மை முயற்சிகளின் செயற்திட்டம் (கட்டம் -01) - 2021**

---

இலங்கை தென் மேற்குப் பகுதியில் நகரங்களிற்கான சுகாதாரம் மற்றும் தூய்மை முயற்சிகளின் செயற்திட்டத்தின் (கட்டம்- 01) 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாய சோசலிச குடியரசிற்கும் பிரான்சிஸ் டி அபிவிருத்தி முகவருக்கும் இடையில் கைச்சாத்திட்ட 2016 யூன் 01 ஆந் திகதிய சீஎல்கே 1013 - 01 கே ஆம் இலக்க கடன் வசதி உடன்படிக்கையின் 3.4.3(எச்) ஆம் பிரிவு மற்றும் 2016 மார்ச் 18 ஆந் திகதிய சீஎல்கே 1013- 02 எல் ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

---

செயற்திட்டத்தின் கடன் வசதி உடன்படிக்கை மற்றும் நிதியளிப்பு உடன்படிக்கை என்பவற்றின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த தற்போதைய நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை செயற்திட்டத்தின் அமுலாக்கும் முகவராக உள்ளது. செயற்திட்டத்தின் குறிக்கோள்களாவன, (அ) நீர்கொழும்பு மாநகர சபை பகுதியில் 73,000 மக்களிற்கான விரிவாக்கப்பட்ட கழிவுநீர் சேகரிப்பு சுத்திகரிப்பு முறைமை மற்றும் சுகாதார சேவைகளிற்கான நுழைவுகளை முன்னேற்றுதல், (ஆ) தண்ணீர் மற்றும் சுகாதார துறை கட்ட வேலைகளை தெளிவுபடுத்தல் தரமுயர்த்துதல், (இ) வறுமைக்கு எதிராக வடிவமைக்கப்பட்ட வறுமைக் குறைப்பின் கொள்கைகள் அபிவிருத்தி ஊடாக பாதிக்கப்பட்ட வீட்டுடமையாளர்களிற்கான சேவைக்கு நுழைவு வசதிகள், (ஈ) கடலமுக்கம் மற்றும் கடற்சுழற்சச்சி தந்திரோபாயம் மற்றும் அமுக்கம் மற்றும் உயிரணுவியல் பராமரிப்பு என்பனவாகும். செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 18,739.81 மில்லியனிற்கு சமமான யூரோ 107.70 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 13,224 மில்லியனிற்கு சமமான யூரோ 76 மில்லியன் கடனாகவும் ரூபா 991.81 மில்லியனிற்கு சமமான யூரோ 5.70 மில்லியன் மானியமாகவும் பிரான்ஸ் டி அபிவிருத்தி முகவர் வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 4,524 மில்லியனிற்கு சமமான யூரோ 26 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கபட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 யூன் 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2022 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

## 1.3 அபிப்பிராயம்

---

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

**2. பௌதீக செயலாற்றல்**

**2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்**

| | நடவடிக்கைகள் | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக செயராற்றல் எதிர்பார்க்கப்பட்டது | உள்ளபடியானது | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | நீர் கொழும்பு சபை முன்னுரிமை பகுதிக்காக நீரிறைக்கும் நிலையத்திற்காக பிரதான இறைக்கும் இல்ல மற்றும் நிர்மாணத்திற்கான கழிவகற்றல் வலையமைப்பின் வழங்கல் மற்றும் குழாயிடல் | ஒப்பந்தமானது 2022 திசெம்பரில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது | கேள்வி கோரல் ஆவணங்களிற்கான SCAP அனுமதிக்காக காத்திருத்தல் | திருத்திய கொள்வனவு பட்டியலின் பிரகாரம், 2022 திசெம்பரில் இந்த ஒப்பந்தம் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், நாட்டில் நிலவிய பொருளாதார ஸ்திரனின்மையால் AFD கடன் வழங்கலை நிறுத்தியிருந்தது. எனவே, கேள்வி கோரலிற்கான கேள்வி ஆவணங்களை கோராதிருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. | 2022 யூன் 30 இல் கடன் முடிவுறுத்தப்பட்டதிலிருந்து செயற்திட்ட நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |
| (ஆ) | நீர்கொழும்பு கழிவுநீர் முகாமைத்துவ முறைமை மற்றும் கழிவகற்றல் முறைமை மேற்கொள்கின்ற வீட்டு இணைப்புகள் என்பவற்றிற்கான கழிவுநீர் சுத்திகரிப்பு பொறியின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணம் மற்றும் வெளியகற்றல் | ஒப்பந்தங்கள் 2018 யூனில் வழங்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது | கேள்வி ஆவணம் கோருவதற்காக AFD அனுமதிக்காக காத்திருத்தல் | வடிவமைப்பு மற்றும் மேற்பார்வை ஆலோசனை ஒப்பந்தத்தின் கொள்வனவில் தாமதம் காரணமாக ஆரம்பத்தில் தாமதமாகும். எவ்வாறாயினும், ஆரம்ப வடிவமைப்பு கோள்வி ஆவணம் தயாரித்தல் 2021 ஏப்ரல் சம்பவம் மற்றும் நிலவிய கோவிட்-19 நோய்தொற்று காரணமாக | 2022 யூன் 30 இல் கடன் முடிவுறுத்தப்பட்டதிலிருந்து செயற்திட்ட நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | பூர்த்தியாக்க முடியாதிருந்தது. திருத்திய கொள்வனவு பட்டியலின் பிரகாரம், 2023 பெப்ரவரியில் இந்த ஒப்பந்தம் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. | |
| (இ) | செயற்திட்ட பகுதியில் குறைந்த வருமான சமூகங்களின் சுகாதார வசதிகளின் முன்னேற்றம் | ஒப்பந்தங்கள் 2018 யூனில் வழங்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது | ஒப்பந்தங்கள் 2022 மே மாதம் **25** ஆம் திகதி வரையும் வழங்கப் பட்டிருக்கவில்லை. | ஆரம்ப வேலைத் திட்டம் செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவால் தாயரிக்கப் பட்டதுடன் வீட்டுடமை அளவை பூர்த்தியாக்கப் பட்டிருந்தது. எவ்வாறாயினும், கடன் உடன்படிக்கையின் பிரகாரம் NGO ஒன்றிற்கு ஒப்பந்தத்தை வழங்குவதற்கு AFD ஒத்துக் கொண்டிருந்தது. கலந்துரையாடல் செயற்பாட்டில் உள்ளது. தாமதம் ஒட்டு மொத்த செயற்திட்ட இலக்கினை பாதித்திருக்கவில்லை. | கொள்வனவு நடைமுறையினை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | கழிவகற்றல் முகாமைத்துவ திறன் அபிவிருத்தி ஆலோசனை | கொள்வனவு நடைமுறை 2018 நவம்பரில் தொடங்க வேண்டுமென பட்டியலிடப்பட்டது | கேள்வி ஆவணம் கோருவதற்காக AFD அனுமதிக்காக காத்திருத்தல் | இந்த ஒப்பந்தத்திற்கான கேள்வி ஆவணம் தயாரிப்பதிற்கு பொறுப்புடைய PIEC ஆலோசனையாளரால் வேலைகள் தொடங்குவதில் தாமதம் விளைந்தமையால் | கொள்வனவு நடைமுறையினை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

ஆரம்ப கொள்வனவில் தாமதம் PIEC ஒப்பந்தம் வழங்குவதில் தாமதம். SMSDC P1- EOI மதிப்பாய்வு நடைமுறையில் உள்ளது. வரைவு RIP 2022.02.21 இல் ஆவண அனுமதிக்கு அனுப்பப் பட்டதுடன் 2022.02.21 இல் AFD கருத்துரைகளிற்கும் அனுப்பப்பட்டது.

SMSDC P2- பெறப்பட்ட கேள்விச் சபை அனுமதி மற்றும் கேள்வி கோரல் 2022.04.06 இல் வெளியிடப்பட்டது,

P3- தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கான பயற்சி நிலைய அபிவிருத்தி வசதிக்கான கேள்வி ஆவணம் தயாரித்தல் பூர்த்தியாக்கப் பட்டதுடன் DPC இடமிருந்து ஆவண அனுமதி பெறப்பட்டது ஆனால் AFD அனுசரணை பெறப்பட்டிருக்கவில்லை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (உ) | காணி சுவீகரிப்பு | நீர்கொழும்பில் 13 காணிகள், காலியில் 17 காணிகள் மற்றும் உனவட்டுணவில் 7 காணிகள் | காணிச் சுவீகரிப்பு நடைமுறை செயற்பாட்டில் உள்ளன. | நிர்மாண வேலைகள் தொடங்குவதற்கு முன்னர் காணிக்குள் நுழையும் சாத்தியம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது காணியின் உரிமையாண்மையை மாற்றிப் பெறுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.2 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2016 இல் உடன்படிக்கை கைச்சாத்திட்ட திகதியிலிருந்து இரண்டு ஆண்டுகளின் பின்னர் 2018 இல் கடனளிக்கும் முகவரால் கடன் கைதவிர்ப்பு தொடங்கப்பட்டிருந்ததின் விளைவால் 2021 திசெம்பர் 31 வரை கைதவிர்க்கப்படாத கடன் மீதிகளில் கடப்பாட்டு கட்டணமாக ரூபா 405.43 மில்லியன் தொகையை கடனளிக்கும் முகவர் அறவிட்டிருந்தார். | CLK1013 01K ஆம் இலக்க கடன் உடன்படிகையின் உட்பிரிவு 6.1 இன் பிரகாரம், கிடைக்ககூடிய கடன் தொகையின் 0.5 சதவீத கடப்பாட்டுக் கட்டணங்கள் மற்றும் எந்தவொரு மீளெடுப்பு தொகையும் ஏதாவது நிலுவையாகவிருக்கின்ற மீளெடுப்பு தேவைகளிற்கு அமைய கடனளிப்போரால் கிடைக்க வேண்டியிருந்தது. | செயற்திட்ட நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கொள்கை மற்றும் நிறுவன ரீதியான தரமுயர்த்தல் ஆலோசனை ஒப்பந்தமானது ரூபா 54.66 மில்லியன் கொடுப்பனவுகளுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் கணக்கீட்டு முறைமையை விருத்தி செய்வதற்காக வழங்கல் 3, வழங்கல் 4 மற்றும் வழங்கல் 5 மற்றும் 2020 இல் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் கழிவகற்றல் முகாமைத்துவ திறன் விருத்திக்காக வழங்கல் 7 மற்றும் வழங்கல் 8 என்ற பெயரில் அறிக்கைகளை | வழங்கல் 3, 4, 5 என்பவற்றினை செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் சம்பந்தப்பட்ட பிரிவுடன் ஒருங்கிணைத்து அமுலாக்கலுக்காக நெறிப்படுத்தியது. வழங்கல் 7 மற்றும் வழங்கல் 8 பயன்படுத்தப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்டன அத்துடன் SMSDC பொதிகள் அமுலாக்கப்பட்டன. இதன்படி, வழங்கல் 7 மற்றும் 8 இன் வெளியீடுகள் நீர் | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது வினைத்திறனான, சிக்கனமான மற்றும் ஆக்கபூர்வமான வழியில் செயற்திட்ட நோக்கெல்லை தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சமர்ப்பித்திருந்தது. எவ்வாறாயினும், அந்த அறிக்கைகளில் உள்ளடக்கிய பரிந்துரைகள் 2022 மே 25 வரையும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை. | மீட்டெடுத்தல் பிரிவின் இயலளவு அபிவிருத்திக்காக பயன்படுத்தப்பட்டன. | |
| (இ) | செயற்திட்டமானது கொள்கை மற்றும் நி-றுவன ரீதியான தரமுயர்த்தல் ஆலோசனை ஒப்பந்தத்தின் செயற்திட்ட நோக்கெல்லையை குறைத்ததிலிருந்து சேமிப்புகளை பயன்படுத்தி தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் மனிதவள ஆலோசனையாளரை சேர்ப்பதற்காக முரண் கட்டளை இல. 03 ஐ அனுமதித்திருந்தது. | மேலதிக பொது முகாமையாளர் (பீ&பீ) இடமிருந்து வேண்டுகை பெறப்பட்டிருந்ததுடன் முரண் கட்டளை குழு அனுமதியுடன் ஒரு மாதம் மாத்திரம் (ரூபா 400,000) முரண் கட்டளை செலுத்தப்பட்டது. | செயற்திட்டமானது செயற்திட்ட நோக்கெல்லைக்குள் செலவினத்தை சமாளிக்க வேண்டும். |

**2.3 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|
| தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை வாக்குப்பண பேரேட்டு மதிப்பீட்டின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான இலங்கை அரசாங்க செலவினம் ரூபா 26.91 மில்லியனாக இருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இது ரூபா 29.28 மில்லியனாக இருந்தது. | இந்த வித்தியாசத்திற்கான சில சீராக்கல்கள் இருந்தன. | செயற்திட்டமானது வாக்குப்பணப் பேரேட்டு மதிப்பீட்டிற்குள் செலவினத்தை சமாளிக்க வேண்டும். |

## 2.4 முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட தீர்க்கப்படாதிருந்த விடயங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
| --- | --- | --- |
| தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பச் சபை காலி மாவட்டத்தில் கழிவு நீர் சுத்திகரிப்பு பொறியை நிர்மாணிப்பதற்கு பட்டியலிடப்பட்டது. மேலும், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிவமைப்புச் சபை அந்த நோக்கத்திற்கான காணியை தெரிவு செய்திருந்ததுடன் 2014 ஆம் ஆண்டின் இறுதியில் சுவீகரிப்பு நடைமுறைகளை தொடங்கியிருந்ததுடன் 2019 யூன் 17 இல் பூர்த்தியாக்கப்பட்டது. எவ்வாறாயினும், காணி கொள்வனவு செய்வதற்காக ஏற்கனவே செலுத்தப்பட்ட முற்பணத்தை அறவிடுவதற்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் தொடரப்பட்ட வழக்கு மீதான தீர்ப்பிலுள்ள தாமதத்தால் 2022 மே 25 வரையும் காணியின் சட்ட ரீதியான உரிமையாண்மை மாற்றப்பட்டிருக்கவில்லை. | காணி முற்பண கொடுப்பனவு மீதான நீதி மன்ற வழக்கு செயற்பாட்டில் உள்ளமையால், காணிச் சுவீகரிப்பு செயற்பாட்டை நிறுத்துவதற்கு தீர்மாணிக்கப்பட்டது. | காணிச் சுவீகரிப்பானது வினைத்திறனான, சிக்கனமான மற்றும் ஆக்கபூர்வமான வழியில் மேற்கொள்ளப்பட வேண்டும். |